# யோக நரசிம்மர் ஆலயம்

## சாந்திப்பிரியா



முதலில் ஒன்பது அவதாரங்களை எடுத்துள்ள பகவான் நரசிம்மர் யார் என்பதை தெரிந்து கொள்ள வேண்டும்? ஒரு முறை ஹிரண்யகசிபு என்ற அரக்கன் பூமியை ஆண்டு வந்தான். அவன் கடுமையான தவம் செய்து பிரும்மாவிடம் இருந்து தன்னை அழிக்க முடியாத வரம் பெற்றான். அதன்படி இரவிலும், பகலிலும் மனிதனோ, மிருகமோ, ஆயுதங்களோ எந்த உலகிலும் அவனைக் கொல்ல முடியாது. அதைப் பெற்றவன் அட்டகாசம் செய்து அனைத்து தேவர்களையும் துன்புறுத்தி வந்தான். தானே கடவுள் என்றான். அவன் கொட்டத்தை அடக்கி அவனை அழிக்க விரும்பிய பிரும்மா விஷ்ணுவின் உதவியை நாட வேண்டியதாயிற்று. ஹிரண்யகசிபுவிற்குப் பிறந்த மகன் பிரகலாதன். அவன் விஷ்ணு பக்தன். அவன் பகவான் விஷ்ணுவை வணங்குவதை ஏற்காத ஹிரண்யகசிபு அவனை வம்புக்கு இழுக்க, ஒரு நாள் பகலோ இரவோ இல்லாத இரண்டும் கூடும் அந்தி வேளையில், விஷ்ணு இருப்பதாக பிரகலாதன் கூறிய தூணை தன்னுடைய காலால் எட்டி உதைக்க அதில் இருந்து வெளிப்பட்ட மனிதனும் அல்லாத, மிருகமும் அல்லாத சிங்கத்தின் தலையைக் கொண்ட விஷ்ணு தன்னுடைய நகங்களினால் அவனைக் கீறி அழிக்கின்றார். அதுவே அவர் எடுத்த நரசிம்ம அவதாரப் பின்னணி.

அந்த நிகழ்ச்சியினால் ஏற்பட்ட கோபம் விஷ்ணுவான நரசிம்மருக்கு அடங்காமல் இருக்க அனைவரும் பயந்து போய் பிரகலாதனை அவர் சாந்தம் அடைய ஏதேனும் வழி செய்யுமாறுக் கேட்டுக் கொள்ள அவனும் விஷ்ணுவை பிரார்தித்து அவருடைய கோபத்தை அடக்க அவர் லஷ்மி நரசிம்மராக கோபம் அடங்கிய யோக நிலையில் காட்சி தந்தார். அவர் நரசிம்ம அவதாரத்தில் எடுத்த ஒன்பது அவதாரங்கள் ஜ்வால நரசிம்மர், பார்கவ நரசிம்மர், யோக நரசிம்மர், குரோத நரசிம்மர், கராஞ்சா நரசிம்மர், சத்ரவாத நரசிம்மர், பாவன நரசிம்மர், அபிலோஹ நரசிம்மர், மற்றும் மஹோல நரசிம்மர் என்பன. அவர் தன்னுடைய மனைவி சகிதம் இருக்கும் பொழுது லஷ்மி நரசிம்மராக வணங்கப்படுகின்றார். உலகில் உள்ள நரசிம்ம ஆலயங்களில் யோக நரசிம்மருக்கும், லஷ்மி நரசிம்மருக்கும் அனேக ஆலயங்கள் உள்ளன.

அப்படிப்பட்ட யோக நரசிம்மருக்கு கர்னாடக மானிலத்தில் புகழ் பெற்ற இரண்டு நரசிம்மஸ்வாமி ஆலயங்கள் உள்ளன. தோட்டமல்லூர் என்ற இடத்தில் இருந்து சுமார் நான்கு கி.மீ தொலைவில் உள்ளது குருனேகரி என்ற பெயருடைய வனம். ஒரு முறை அந்த காட்டில் தவத்தில் இருந்த கன்வ ரிஷி நரசிம்மர் ஒரு மலை உச்சி மீது ஸ்தம்ப உருவில் இருப்பது போல உணர்ந்தார். அவரது தவ வலிமையினால் அதை உண்மை எனவும் தெரிந்து கொண்டார். ஆகவே அந்த உண்மையை உலகம் முழுவதிலும் உள்ள மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும் எனவும் விரும்பினார்.

காடு கோல்லா என்ற மலைக்குடி மக்கள் அந்த காட்டில் வந்து வசிக்கத் துவங்கிய நேரம் அது. அவர்கள் தம்மிடம் இருந்த பசு மாடுகள் மற்றும் கால்நடைகளை அதன் உணவிற்காக அந்த மலை உச்சிவரை ஓட்டிச் சென்று வருவது வழக்கம். அங்குள்ள செடி, கொடி தழைகளை அவை தின்ற பின் மீண்டும் அவற்றை அழைத்து வந்து விடுவார்கள். இப்படி இருக்கையில் ஒரு மாடு தினமும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் இருந்த புதருக்கு அருகில் சென்று தன் மடியில் இருந்து பாலை அந்த இடத்தில் வழிய விட்டப் பின் திரும்பி வந்தது. அதை கவனித்த கான்வ ரிஷி நரசிம்மர் மலை உச்சி மீது ஸ்தம்ப உருவில் இருப்பதை உலகிற்குத் தெரிய வைக்க அதுவே தக்கத் தருணம் என எண்ணினார். ஆகவே தன்னையும் ஒரு காடு கோல்லா மனிதன் போல உரு மாற்றிக் கொண்டு அந்த பசு மாடு பாலை தானாக சுரக்கும் அந்த புதர் அருகில் சென்று அந்த மாடு பாலை சுரந்து கொண்டு இருந்த பொழுது மற்றவர்களை அழைத்து அதைக் காட்டினார். அதைக் கேட்ட மற்றவர்கள் மறுநாளும்

அந்த மாட்டை பின் தொடர்ந்து சென்று பார்க்க அதுவும் முனிவர் கூறியது போலவே அந்த புதரில் பாலை சுரப்பதைக் கண்டு வியந்தனர்.

உடனே அனைவரும் ஒன்று சேர்ந்து அந்த முனிவர் கூறியபடி அந்த புதரை வெட்டி உள்ளே என்ன இருக்கின்றது எனப் பார்க்க அங்கு ஸ்தம்பத்தில் நரசிம்மர் சிலை உள்ளதைக் கண்டனர். ஓடிச் சென்று கான்வ முனிவரிடம் அதைக் கூற அவர் அந்த மூர்த்திக்கு செய்ய வேண்டிய பூஜை, புனஸ்காரங்களை அவர்களுக்குக் கற்றுத் தந்தப் பின் அங்கிருந்து கிளம்பிப் சென்றவர் எங்கோ போய் மாயமாக மறைந்து விட்டார். அது அஹோபல மடத்திற்கு இணையான இடமாகக் கருதப்பட்டது. அதற்குப் பின் அந்த காட்டுக்குடியினர் அந்த ஆலயத்தை பராமரித்து பூஜை புனஸ்காரங்களை செய்து வருகின்றனர். இப்போதும் அந்த கிராமத்தில் இருபதுக்கும் மேற்பட்ட காடு கோல்லாவின் சந்ததியினர வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அவர்கள் ஆலயத்தை தம் நிர்வாகத்தில் வைத்துக் கொண்டு உள்ளனர். வருடத்திற்கு ஒரு முறை உற்சவமும், ஸ்வாமி ஊர்வலமும் நடை பெறுகின்றது.



ஆலய விலாசம்:

**Sri. Bharadwaj Bhattar,**
**Sri Sheshadri Bhattar,**
**Sri Kurunegere Yoga Narasimha Temple,**
**Kurunegere ,Chakallur Post ,**
**Channapatna Taluk,**
**Bangalore District**
**Telephone: :+91 80 7262311**

---

நன்றி: இந்த கட்டுரையில் காணப்படும் மூலச் செய்திகள் அனைத்திற்கும் ஆதாரம் திரு லஷ்மி நாராயணன் ஸ்ரீதர் அவர்களின் இணையதள செய்திகளே. http://www.karnatakavaishnavatemples.net என்ற இணையதளத்தில் உள்ளவற்றை தமிழில் பிரசுரித்துக் கொள்ள அனுமதி தந்துள்ள அவருக்கு என் நன்றி. திரு ஸ்ரீதரின் முகவரி:

**Lakshminarasimhan Sridhar, SRIHARITHA [Behind Water Tank], I Floor, Sathyam Street, I Cross, Munieshwara Swamy Layout, Munnekolala, Marthahalli Post, Bangalore: 560037, INDIA**
Tel:- Resi: 91 80 28475017, Medical Shop : 91 80 41169839, Cell: 91 9448322378
E-mail- srihi@vsnl.com